www.tamilarangam.net


# பொதுமை

மலர்: 3 இதழ்: 6

டிச. 86/ஜன. பெப். 87


# பேச்சுவார்த்தைக்கு அழைப்பது தீர்வைக் காணவா?

**மட்டக்களப்பு:**

- இருநூறு பேர்வரை படுகொலை.
- மக்கள் காடுகளில் தஞ்சம்.
- மூன்று புதிய இராணுவ முகாம்கள். கொக்கட்டிச் சோலை, மணற்பிட்டி, அரசடித்தீவு ஆகிய இடங்களில்

**மன்னார்:**

- மடுக்கோவிலில் தஞ்சமடைந்தோர் கைது.
- மாந்தை, அடம்பன், பரப்புக்கடத்தான், விடத்தல்தீவு பகுதிகளில் இராணுவம் முற்றுகை.
- இலுப்பக்கடவை, மடுக்கோவில், பள்ளமடு, அடம்பன் பகுதிகளில் புதிய இராணுவ முகாம்கள்.

**கிளிநொச்சி:**

- ஆனையிறவு முதல் கிளிநொச்சி வரை புதிய இராணுவ முகாம்கள்.
- பயணிகள் உட்படப் பலர் படுகொலை.
- உருத்திரபுரம் பகுதியில் வீடுகள் பல தீக்கிரை.

**யாழ்ப்பாணம்:**

- குடாநாட்டைத் தாக்க பொம்பர்கள், சிறுவிமானங்கள் முற்றுகை.
- பொம்பர் தாக்குதல், முகாம்களிலிருந்து அடிக்கடி மேற்கொள்ளப்படும் ஷெல் தாக்குதல்கள்.
- பொருளாதார, தொலைத்தொடர்பு, எரிபொருள் தடை.

**மலையகம்:**

- இளைஞர்கள் பரவலாகக் கைது.
- நாளும் முளைவிடும் புதிய சிங்களக் குடியேற்றங்கள்.
- தோட்டங்களுக்குள்ளும் பொலிஸ் – இராணுவ கெடுபிடிகள்.

## இத்தனைக்கும் பின்னர்.

காலங்காலமாக ஒருதலைப் பட்சமாக பேச்சுவார்த்தைகளை முறியடிப்பதும், ஒப்புக்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களை மீறுவதும் சிறீலங்கா அரசிற்கு கைவந்த கலையாகும். உண்மையான இணக்கத் தீர்வொன்று காணப்பட வேண்டும். என்பதை நேர்மையாக விரும்பாமல் – உலகரங்கில் தன்னை வெளிக்காட்டவும் ஆயுதத் தயாரிப்புக்கான கால அவகாசத்தைப் பெறவுமே சிறீலங்கா அரசு இதுகாலவரை பேச்சுவார்த்தை அரசியல் தீர்வு எனக்கபடநாடகமாடிவந்துள்ளது என்பது வெளிப்படையானதாகும்.

கடந்த இரு மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ அட்டகாசத்தால் கொக்கட்டிச்சோலைப் பகுதியில் மட்டும் இருநூறுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இருபதாயிரம் பேர் வரையில் காடுகளுக்குள் தஞ்சமடைந்தனர். உணவுப் பொருட்கள் கூட எடுத்துச் செல்வது தடுக்கப்பட்டது. கிளிநொச்சிப் பகுதி முற்றுகையிடப்பட்டுள்ளது. புதிதாக பல இராணுவ முகாம்கள் நிறுவப்பட்டுள்ளது. மன்னார் மாவட்டக் கிராமங்களை பொதுமக்கள் விட்டு வெளியேற்றப்படுகின்றனர். குடநாட்டுப் பகுதிகளில் பொம்பர் மற்றும் விமானங்களின் தாக்குதல்களுடன் கூடவே முகாம்களிலிருந்து தொடர்ச்சியான ஷெல்லடிகள். தினமும் அப்பாவிமக்கள் பதட்டத்துடன் வாழ வேண்டிய நிலை. திரும்பக் குடியேறிய திருமலை, மூதூர் பகுதி மக்கள் மீது நேரடித்தாக்குதல்களும். விமானக் குண்டுவீச்சுகளும் இவையனைத்துடனும் பொருளாதாரத்தடை மற்றும் தொலைத்தொடர்பு, எரிபொருள் போன்ற துறைகளில் தடைகளைவிதித்து தமிழ் பேசும் மக்களின் - ஈழவர்களின் எண்ண வேட்கையை துப்பாக்கி முனையில் துடைத்துவிட சிறீலங்கா அரசு மூர்க்கமாக முனைந்து நிற்கிறது.

ஐக்கிய இலங்கை - ஒற்றையாட்சி என்றெல்லாம் கூறிக்கொண்டே இத்தகைய அனர்த்தத்தில் ஈடுபடும் அதேசமயம் அரசியல் தீர்வில் அக்கறை கொண்டவரெனக் காட்டிக் கொள்ள ஜே. ஆர். முனைந்துள்ளதையே அவரது பாராளுமன்றத் தொடக்க உரை தெரிவிக்கிறது. 'போர் என்றால் போரென' முழங்கிய ஜே. ஆர். தன்னைச் சமாதானப் பிரியர் எனக் காட்டமுயற்சிக்கின்றார். இன ஒதுக்கல் - இன ஒடுக்கல் என்ற வடிவங்களெல்லாவற்றையும் கடந்து இன அழிப்பில் ஈடுபட்டிருக்கும் ஜே. ஆர். அரசின் பேச்சுவார்த்தைகள் வெறும் கானல் நீரே, 83இன் பின்னைய பேச்சுக்கள் சகலவற்றையும் விதண்டாவாதங்களாலும் - இராணுவக் கெடுபிடிகளாலும் முறியடித்து இராணுவத்தைப் பலப்படுத்திக்கொண்ட ஜே. ஆர். அரசு இன்று பேச முனைகின்றமை ஒரு சூழ்ச்சிப் பொறியாகும்.

நேரடியாக விடுதலை அமைப்புகளுடன் பேசத் தயார் எனக் கூறுவது உண்மையில் இந்திய அரசுக்கும் தமிழ் பேசும் மக்களுக்கும் இடையே பிளவை ஏற்படுத்தவே. ஏற்கனவே சிறீலங்காவின் கபடத்தனத்தைச் செவ்வனே புரிந்து கொள்ளாமல் போராளிகளோடு இந்திய அரசு நடந்து கொண்ட விதம் குறித்ததான அதிருப்தியை சாதகமாகப் பயனபடுத்தி இந்திய அரசின் நல்லெண்ணத்திலிருந்து போராளிகளைத் தனிமைப்படுத்துவதையே ஜே ஆர் தந்திரோபயமாக கொண்டிருக்கின்றார். 83 வரை தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளும் அரசும் பலதடவை பேச்சு நடாத்தி ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி அவையெல்லாம் ஆக்கி எறியப்பட்ட சம்பவங்களின் பின்னணி படிப்பினைகளிலிருந்து எமது நியாயமான குரலை உலகறியச் செய்யவும் சர்வதேச சமுதாயம் சாட்சியாக விளங்கவும் வேண்டுமென்ற தமிழ் பேசும் மக்களின் எதிர்பார்ப்பிற்கூடாகவே இந்திய அரசு இந்தப்பிரச்சனையில் தலையிட நேரிட்டது.

ஆனால் இந்திய அரசோ போராளிகளின் எண்ண நிலைப்பாட்டையும், தமிழ் பேசும் மக்களின் நியாயமான அபிலாசைகளையும் செவ்வனே செவிமடுக்காமல் சிறீலங்காவுடன் இணங்கப் பேசக் மூலம் தாக்கலாம் என நம்பியது. தூதுவர்கள் டிக்சித்தும, துலசரதனும் மாறிமாறிப் பறந்தனர். பல அமைச்சர்கள் இலை அமைச்சர்கள் உயரதிகாரிகள் கொழும்புக்கு வந்து சென்றனர். பலவேறுபட்ட பேச்சுக்களில கலந்து கொண்டனர்.

சில சமயங்களில் "உடன்பாடு காணப்பட்டாயிற்று இனப் பிரச்சினை தீர்ந்தது. ஈழப் போராட்டம் ஓய்ந்தது" என்பது வரை செய்திகள் வெளியாகின. அனைத்தும் வெறும் புஸ்வானமாகிப் போக அப்பாவி மக்கள் மட்டும் தங்கள் உயிர் உடமைகளை காத்துக் கொள்ள அலைய நேரிட்டது.

எனவே இனியும் ஒரு பேச்சுவார்த்தை நடத்தப்படல் வேண்டுமானால் ஜே. ஆர். தனது நேர்மையும் நல்லெண்ணத்தையும் செயலில் காட்ட வேண்டும். உண்மையான இணக்கத் தீர்வு கண்டடையப்படல் சாத்தியம் என்பது தமிழ் பேசும் மக்கள் உணர்வு பூர்வமாக ஏற்றுக்கொள்ளக் கூடிய சூழ்நிலையை ஜே. ஆர் அரசே உருவாக்க வேண்டும். அதற்காக,

1. புதிதாக திறக்கப்பட்ட இராணுவ முகாம்கள் அனைத்தும் வாபஸ் பெறப்படல் வேண்டும்.

2. கைதுசெய்யப்பட்டவரனை வரையும் விடுதலை செய்யப்பட்டாக வேண்டும்.

3. இடம்பெயர்ந்த தமிழ் பேசும் மக்கள் மீண்டும் தத்தம் இடங்களில் குடியமர்வது உத்தரவாதப்படுத்தல் வேண்டும். ஆயுதங்கள் சகிதம் குடியேற்றப்பட்டவர்கள் விலக்கப்படல் வேண்டும்.

4 பொருளாதார மற்றும் தொலைத்தொடர்பு போன்ற தடைகள் உடன் நீக்கப்படல் வேண்டும்.

இவ்வாறான கைங்கரியங்களை செவ்வனே செய்தால் மட்டுமேபோராளிகள் அமைப்புக்கள் ஜே. ஆர் அரசுடன் பேசுவது பற்றிச் சிந்தித்தல் சாத்தியமாகும்.

> புரட்சிகர அணிகளை உறுதியாக கட்டியமைக்கும், சோஷலிச நிர்மாணத்தை தொடர்ந்து நடத்தவும், வெகுமக்களின் ஒற்றுமையும நெருக்கத்தையும் பலப்படுத்தும் வேலையை விரோத சக்திகளின் வஞ்சக சாகசங்களுக்கு எதிரான போரட்டத்தோடு முறையாக இணைத்து நடத்த வேண்டியது மிக அவசியமாகும்.
>
> கிம் - இல் - சுங் -

**கருத்து மக்களைப் பற்றிக் கொண்டால் சக்தியாய் உருவெடுக்கும்**

www.tamilarangam.net

# மலையகத்தில் தொடரும் மர்ம மறைவுகள்

கடந்த டிசம்பரில் லிந்துலை-நாகசேனையில் இரு இன குழுக்களுக்கிடையில் இடம் பெற்ற சினேகபூர்வ கிரிக்கட்போட்டி பெரும்பான்மை சமூகத்தைச் சார்ந்தவர்களால் குழப்பப்பட்டு கலகத்தில் முடிவடைந்தது. இதையடுத்து கடைகள் பல சேதப்படுத்தப்பட்டன. வாகனங்களுக்கு கற்கள் வீசப்பட்டது உடனடியாக நிலைமை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டதாக அரசு அறிவித்தபோதும் மர்மமான முறையில் முக்கியமான பிரமுகர்கள் மறைந்து போவது தொடர்கதையானது.

23. 12. 86 இல் அட்டன் ஏபோட்சலி (கன்னியப்பூ) தோட்டத்து வாலிபனான தமிழ்ச்செல்வன் நகர்ப்புறத்திற்கு உணவு வாங்கச் சென்றதிலிருந்து காணமற் போய் விட்டான். பொலிஸ் நிலையங்கள் கைவிரித்து விட்டன. இந்நிலையில் தோட்டத்தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தை ஆரம்பித்தனர். தமிழ்ச்செல்வன் இரகசிய பொலிஸாரினால்கைது செய்யப்பட்டு இராணுவ தலைமைக்காரியாலயத்தில் வைக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது தமிழ்ச் செல்வனை விடுதலை செய்யக் கோரிவரும் மலையகமக்கள் வேலைநிறுத்தத்துடன் தொழிற்சாலைச் சூழலில் உண்ணுவிரதமும் மேற்கொண்டனர்

26.12.86இல் தலவாக்கெலசென். கூம்ஸ் தோட்டத்தில் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத் தலைவர் சேசையா(வயது35)மர்மமான முறையில் காணமற் போனார். பொலிஸாரால் இவரைக் கண்டு பிடிக்கமுடியவில்லை பத்தாயிரத்துக்கும் அதிகமான தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தை மேற்கொண்டனர். 5.1.87-ல் தலவாக்கெலசென். கூம்ஸ்தோட்டத்தொழிலாளர் சிலர்சேசையாகொலைசெய்யப்பட்டுப் புதைக்கப்பட்டிருக்கலாம் எனச்சந்தேகம்கொண்டு குறிப்பிட்ட ஓர் இடத்தை தோண்டிப்பார்க்கும் முயற்சியில் ஈடுபட்டனர். அச்சமயம் சிங்களக் காடையர்கள் கல் எறிந்து கலகம் விளைவித்தனைத்தொடர்ந்து,கத்தி,வாள் போன்ற ஆயுதங்களுடன் காடையர்களை தாக்கத் தொடங்கினர் இதையடுத்து சென் கூம்ஸ் தோட்டத்திற்குள் புகுந்த காடையர்கள் பொலிஸ்-இராணுவ ஒத்துழைப்புடன் விடுதிகளுக்கு தீ வைத்தனர். நுவரெலியாவிலிருந்து விசேடமாக வரவழைக்கப்பட்ட இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்தில் மூவர் கொல்லப்பட்டதோடு பதினெட்டுக்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர். ஆரம்பத்தில் சடலங்களைக்கூட கையளிக்க மறுத்த பொலிஸார் பின்னர் நிபந்தனைகளுடன் சடலங்களை ஒப்படைத்தனர்.

மலையாக மக்கள் மீது காலங்காலமாக சுமத்தப்பட்டிருக்கும் அடக்கு முறைகள் இன்று உயிருக்கே உத்தரவாதமில்லை என்னும்படி பாதுகாப்பு பிரச்சனையாக விஸ்வரூபமெடுத்து வருகிறது என்பதனையே அண்மைய சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன. எனினும் வெகுண்டெழுந்த மலையக மக்களின் வீரமிகு போராட்டங்களின் முன்னால் எந்த அடக்குமுறையும் உடைத்தெறியப்படும் என்பது நிச்சயமானது. தன்னியல்பான போராட்ட வடிவங்களை வெளிக்காட்டி வரும் மலையக மக்கள் கத்தி, வாள் போன்ற சாதாரண ஆயுதங்களுடன் சிங்களக் காடையர்களையும், பொலிஸ்-இராணுவ அட்டூழியங்களையும் எதிர்த்து வருகின்றமை கண்கூடானதாகும்.

மலையகத்தில் அமைதியை நிலைநிறுத்திக் கொண்டு தமிழ் பேசும் மக்களின் இனப் பிரச்சனையைவெறுமனே வடக்கு-கிழக்கு பிரச்சனையாக காட்ட முயலும் ஜே.ஆருக்கு இச்சம்பவங்கள் பொருந்தாவிடியாகும். ஆயுதங்கள் வழங்கப்பட்ட சிங்களக் குண்டர்கள் பட்டாளம் மலையகத்தில் ஆங்காங்கே குடியிருத்தி வருவதாலும் ஆயுதப்படைகளை குவிப்பதன் மூலமும் மலையக மக்களை அச்சுறுத்தலாம் அல்லது அடக்கி, ஒடுக்கிவிடலாம் எனக் கருதினால் அதுவெறும் பகற்கனவாகவே முடியும்.

09.01.87 லிந்துல எல்ஜின் தோட்டத்தில் ஆயுதந்தாங்கிய குண்டர்கள் கொள்ளையிட்டதும், தொழிலாளர்கள் அவர்களை சுற்றி வளைத்து பிடித்ததும் பின்னர் அமைச்சர் காமினி திஸாநாயக்காவின் நேரடித்தலையீட்டால் அவர்கள் விடுவிக்கப்பட்டதும் மலையகத்தின் சிங்களக் காடையர்களுக்கு அரச மட்டத்தில் உள்ள செல்வாக்கை ஊர்ஜிதப் படுத்துவதாகும்.




## தோப்பூர் இராணுவ காவல் அரண்மீது தாக்குதல்!

இஸ்லாமிய மக்களின் மண்ணையும், அவர்களது உடமைகளையும் பறித்தெடுக்க சோவனிச ஆட்சியினர் முயன்று வருவதை திகவாவி, வானல போன்ற பகுதிகளில் காணக் கூடியதாகவுள்ளது. இதன் தொடர்ச்சியாகத்தான் சேருவில புனித நகர்த்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இதனால் தோப்பூர், செல்வநகர், அல்லைநகர், இக்பால்நகர், ஷாபிநகர் போன்ற இஸ்லாமிய கிரமங்கள் பறிபட்டுக் கொண்டு வருகின்றன. இவற்றினை ஊக்குவிப்பதுடன் குடியேறுவோருக்கு பாதுகாப்பு வழங்கும் நோக்குடன் தோப்பூரில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது. இவற்றினை எதிர்க்கும் முகமாகவே இராணுவத்தினரின் காவல் அரண்மீது 1.1.87 அன்று அதிகாலை எம்மால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதில் 3 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

## இயக்கமோதலைத் தடுங்கள்! ஈழப்போராட்டத்தைத் தொடருங்கள்!!

வாழ்வதற்கான சூழ்நிலையே அற்றுக் கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில் ஸ்ரீலங்கா அரசின் அடக்குமுறைக்கு எதிரான போராட்டத்தில் ஒன்றிணைந்து நிற்க வேண்டிய இயக்கங்கள் தங்களுக்குள்ளே மோதிக்கொள்வது மக்கள் நலனையும், போராட்ட முன்னெடுப்புகளையும் புறக்கணிக்கும் தன்மையை வெளிப்படுத்துகிறது

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிமீது (E.P.R.L.F) மேற்கொள்ளப்பட்ட பலாத்காரமான முயற்சியானது அதன் இந்திய நிலைப்பாட்டை முறியடிப்பதற்கானதே எனச் சொல்லப்படுகிறது. ஆனால் ஈழப்போராட்டத்தில் இந்தியாவின் தலையீடானது இயக்கங்களின் ஐக்கியத்திற்கூடாகவே இதுகாலவரை மட்டுப்படுத்தப்பட்டு வந்தது. இந்நெறிமுறைக்கு முரணான தமிழீழ விடுதலைப் புலிகள (L.T.T.E) மேற்கொண்ட அவசர நடவடிக்கையானது அனைத்து விடுதலை இயக்கங்களையும் புறக்கணித்து எமது இலட்சியத்தையே மூழ்கடிக்கக் கூடிய தலையீட்டை இந்தியா செய்வதற்கு வழிவகுத்துள்ளது. எமது கையிலுள்ள நகத்தினாலே எமது கண்களைக் குத்துவது போன்ற இந்த நிகழ்ச்சியினை மக்கள் ஒன்று திரண்டு தடுக்க வேண்டுமென்பதும் இயக்கங்களின் போக்கை வெளிப்படுத்த வேண்டுமென்பதும் இக்காலகட்டத்தில் அவசியமாகும்.

"இயக்கமோதலைத்தடுங்கள் ஈழப்போராட்டத்தைத் தொடருங்கள்" என்ற கோசத்துடன் அனைத்து மக்களும் ஒன்று திரண்டு தற்போதைய சூழ்நிலையை நெறிப்படுத்த முன்வர வேண்டும்.

இவ்வாறு எமது அமைப்பின பொது ஆணைக் குழு கடந்த 15.12.86 இல் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## மன்னாரில் தந்திரப் பொறி (Booby Trap)

கடந்த 14.12.86 இல் மன்னார் மாவட்டத்தில் முருங்கன் என்ற இடத்தில் எம்மவர்களால் மேற்கொள்ளப்பட்ட தந்திரப் பொறித் தாக்குதலில் மூன்று இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயம் அடைந்தனர்.

பரவலாக இடம் பெற்று வரும் கண்ணிவெடித் தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க முடியாத இராணுவத்தினர் நடைபவனியாகச் செல்லும் தந்திரத்தை மேற்கொள்வது அனைவரும் அறிந்ததே. இவ்வாறு நடைபவனியாகச் செல்லும் இராணுவத்தினரைத் தாக்கக் கூடிய விதத்தில் எமது தோழர்களால் தந்திரப் பொறி (Booby Trap) தயாரிக்கப்பட்டு பரிசோதிக்கப்பட்டது. அத் தந்திரப் பொறியில் சிக்குண்டமையினால் மேற்படி இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

## விமர்சன அரங்கில் பொதுமை

ஈழப்புரட்சி அமைப்பின் அரசியல் பிரச்சார ஏடான பொதுமை பற்றிய விமர்சனம் 30.11.86 அன்று பிற்பகல் 4.00 மணியளவில் ஊர்காவற்துறை சிறிய புஷ்பம்மகளிர்கல்லூரியில் இடம்பெற்றது. காவலூர் கலையிலக்கிய வட்டத்தினர் நடத்திய இவ்விமர்சன அரங்கில் நூற்றுக்கணக்கான ஆர்வலர்களும், அறிவு ஜீவிகளும் கலந்து கொண்டனர்.

ஈழப் போராட்டம் பற்றிப் பலரும்பல எண்ணக்கோளாறுகளை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் பொதுமை இதழானது ஈழப் புரட்சி அமைப்பின் குரலாக தனது பங்கினை செவ்வனே செய்து வருகிறது. இன்று ஈழத்தில் அதிக எண்ணிக்கையில் வெளிவரும் ஒரு ஏடு என்ற வகையிலும் ஈழத்தமிழர் பிரச்சனையில் ஒரு புதிய உண்மையான பாதையைக் காட்டுவதற்கு துணிந்துள்ளது என்ற முறையிலும், பாட்டாளி வர்க்க குணும்சங்களைப் பிரதிபலிக்கின்றது என்ற வகையிலும் விற்பனை படைப்புக்களில் இருந்து வேறுபட்ட ரீதியில் பொதுமை விமர்சனத்திற்கு உள்ளாக்கப்பட்டது.

காவலூர் கலையிலக்கிய வட்டத் தலைவர் தமதுரையில் இன்று இயக்க வெளியீடுகளில் மக்களுக்கான தெளிவான பாதையை பொதுமை இதழ் காட்டி நிற்கிறது. பிரச்சனையை சர்வதேச ரீதியில் இணைத்துப் பார்ப்பது வரவேற்கத் தக்கது. இந்தியாவை நேச நாடு என்ற ரீதியில் அணுகியிருக்கிறார்கள். ஆனால் ரஷ்யா ஒரு சமூக ஏகாதிபத்தியம். இதை அம்பலப்படுத்த இவ்விதழ் முன்வரவில்லை. இன்று வெளிவரும் பத்திரிகைகளில் போராட்டத்தில் பங்கெடுத்த புரட்சியாளர்களைக் கொண்ட ஒரு அமைப்பின் மாக்ஸிஸ சித்தாந்த இதழென்ற வகை வகையில் பொதுமையை நாம் விமர்சிக்கின்றோம் என்றார்.

விமர்சனத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய தியாகலிங்கம், தர்மராசா, சந்திரசேகரன், தவபாலன்ஆகியோர் பொதுமை பற்றிய ஆழமான விமர்சனம் செய்ததுடன் இடம்பெறும் ஆக்கங்களை நுணுக்கமாக ஆய்ந்து வெளிக் கொணர்ந்தார்கள். இந்நிகழ்வின் போது சுட்டிக் காட்டிய தவறுகள் திருத்திக் கொள்வதற்கும், நிறைவுகள்செழுமைப் படுத்துவதற்கும் உதவின.

இவ்விலக்கிய வட்டத்தினரால் முன்வைக்கப்பட்ட கேள்விகளுக்கு பத்திரிகை குழுவினரால் பதிலளிக்கப்பட்டதுடன்

(8-ம் பக்கம் பார்க்க)

## கொலன்னுவ எண்ணைத் தாங்கியை தகர்க்க முயற்சி

ஈழப் போராட்டமானது அதன் நிதர்சனத்தை வெளிப்படுத்தி இலங்கையை பிளந்து ஈழத்தை பிரசவிக்க உள்ளதை உணர்ந்த சிங்கள சோவனிச அரசு அதனை முறியடிக்க எரிபொருள்தடை, பொருளாதாரத்தடை என்பவற்றை மேற்கொண்டது. நைஜீரியாவில் பயா்பரா விடுதலையை முறியடித்ததுபோல இங்கும் மேற்கொள்ள ஏகாதிபத்தியங்கள் தூண்டிவிட்டுள்ளன. இவற்றிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக கொலன்னுவ எரிபொருள் நிரப்புநிலைய எண்ணைத் தாங்கிகளை தகர்க்க 15.1.87 அன்று முயற்சி ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இது முயற்சி பூரணப்பட்டிருப்பின் அரசு நிலைதளர்ந்து போய் இருக்கும்.

## கொழும்பில் இன்னொரு முயற்சி

17.12.1986இல் கொழும்பு கோட்டை யோர்க் வீதியில் உள்ள இலங்கை மின்சார சபையின் உப மின் வினியோக நிலையத்தை குண்டு வைத்துத் தகர்ப்பதன் மூலம் கொழும்பு கோட்டையிலுள்ள தபால் தந்தி திணைக்களம். இலங்கை வங்கியின் புதிய கட்டிடம் மற்றும் ஐந்து நட்சத்திர கோட்டல்கள் உட்படப் பல முக்கிய கட்டிடங்களுக்கான மின் வினியோகத்தைத் தகர்க்க முயற்சிகள்எடுக்கப்பட்டன "ஜேம்ஸ் பொன்ட் பாணியில் வைக்கப் பட்ட இக்குண்டுகள் ஒன்றன் பின் ஒன்ருக வெடிக்க வைப்பதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டிருந்தன.

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முயற்சிகளில் ஈடுபட்டுவரும் இந்திய இணை அமைச்சர்களான பி. சிதம்பரமும், நட்வார் சிங்கும் கொழும்பு வந்து சேர்வதற்கு சில மணித்தியாலங்களுக்கு முன்னதாக வெளிவந்த இக்குண்டுச் செய்தி கதி கலங்க வைத்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அதிரடிப் படையினர் துப்பாக்கி பிரயோகம்!

**'ஜிகாத்' உறுப்பினர் பலி! அரசின் முகமூடி கிழிந்தது!!**

கடந்த 13- 2 86 அன்று காலை சுமார் 11 மணியளவில் கல்முனைப் பகுதியில் அதிரடிப் படையினர் அட்டகாசம் புரிந்தனர். இதனுல் சுமார் 30 வீடுகள்வரையில் சேதமாக்கப்பட்டது. மூன்று பாரிய அரிசி ஆலைகள் நாசமாயின. அரச சார்பு ஊர்காவற்படையினைச்சேர்ந்த இஸ்மாயில் மொகமட் சமீம் (27வயது) உட்பட மொகமட் இஸ்மாயில் சுலைமான் லெவ்வை (52வயது)என்னும் முதியவரும் ஸெயின் பீபீ (3[illegible]வயது) என்னும் பெண்மணியும் ஒன்றரை வயதும் நிரம்பாத சிறு குழந்தை ஒன்றும் மரணமடைந்தனர்.

திட்டமிட்டு தமிழ்பேசும் மக்களை பிளவுபடுத்த சர்வதேச பயங்கரவாதிகளான 'மொசாட்' மூளையின் துணையுடன் இயங்கி வரும் சிறிலங்கா அரசானது இஸ்லாமிய மக்களின் நண்பனைப் போல அணிந்திருந்த முகமூடி கிழிக்கப்பட்டது. இச்சம்பவத்தால் விடுதலைப் போராளிகள் என்ற முத்திரையுடன் செயற்பட்டு சில அமைப்புக்களினது தவறுன செயற்பாடுகளால் அதிருப்தி கொண்ட இஸ்லாமியரை கவர்ந்திழுத்து 'ஊர்காவற்படை' என்னும் 'ஜிகாத்' என்னும் ஐந்தாம படைகளை அமைத்து இந்து - இஸ்லாமிய மக்களிடையே கலவரங்களை ஊக்குவித்து ஈழவர்களைப் பிளவுபடுத்தி வந்தது. இப்பொழுது தானே உருவாக்கிய 'ஜிகாத்' அமைப்பை அழிக்க வேண்டிய – அதற்கெதிராகத் தனது துப்பாக்கிகளையே நீட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளமை ஈழப்போராட்ட வளர்ச்சிப் போக்கில் முக்கிய கட்டமாகும்.

அண்மைக் காலங்களில் 'ஜிகாத்', 'ஹிஜ்ரா', 'அல்பத்தா' மற்றும் இஸ்லாமிய இளைஞர் குழுக்கள் ஆயுத முனையில் கொள்ளை அடிப்பதும், அடாவடித்தனங்களில் இறங்கியதும் பொதுமக்களை மிரட்டி வந்ததும் இஸ்லாமிய மக்கள் இடையே வெறுப்புணர்வைத் தோற்றுவித்தது. இஸ்லாமிய மக்களின் நலன்களின் மீது உண்மையான அக்கறையோ– நல்லெண்ணமோ சிறிலங்கா அரசுக்கு எப்போதும் இருந்ததில்லை. தமிழ்பேசும் மக்களுக்கு எதிரான போராட்டத்தில் பகடைக் காய்களாக பயன்படுத்துவதற்கு என்றே சுயநலத்தை மட்டுமே கருதும் இளைஞர் படையினருக்கு பல்வேறுவித வசதியும், ஊக்கமும் அளித்து கட்டப்பட்ட அமைப்புக்கள் காலப்போக்கில் தமது நலன்களுக்கு எதிராக செயற்படுவதை மக்கள் இனங்கண்டு கொண்டனர். இதனுல் இத்தகைய அமைப்புக்களை நிராயுதபாணிகளாக்கி நிர்மூலமாக்க வேண்டிய அவசியம் அரசுக்கு ஏற்பட்டது.

ஆனல் ஆயுத பாவனையில் நாட்டமும் அதன்மூலம் ஒருவித அதிகாரத்தையும் நிலைநாட்டிவந்த இளைஞர் கூட்டம் அதற்கு தயாராக இருக்கவில்லை. இதுதான் கல்முனை சம்பவத்திற்கு பின்னணியாய் அமைந்தது. அரசு சட்ட ரீதியாக கொடுத்த ஆயுதங்களை மீளப்பெறும் பட்சத்தில் தமது பாவனைக்கு ஆயுதங்கள் அவசியம் என உணர்ந்த இளைஞர்கள் 13-12-86இல் போராளிகளின் தாக்குதலால் நிலைகுலைந்த பொலிஸ் அதிரடிப் படையினரின் ஆயுதங்களை எடுத்து மறைத்து வைத்துக் கொண்டனர். இதனை அறிந்த அதிரடிப்படையினர் வழக்கம் போலவே அப்பாவி பொதுமக்கள் மீது தாக்குதல்களை கட்டவிழ்த்து விட்டனர்.

இதன் விளைவே கல்முனையில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள். இச்சம்பவத்தால் கொதிப்புற்ற இஸ்லாமியர்களை குளிர்விக்க அரசு தன் தூதுவராக 16 12.86 இல் 'இஸ்லாமியர் நலன்காக்கும்' மொசாட்டின் துணைவன் அமைச்சர் முகம்மதுவை கல்முனைக்கு அனுப்பி வைத்தது. அரசின் தந்திரத்தைப் புரிந்துகொண்ட மக்கள் அமைச்சரின் வருகைக்கு கடையடைப்பு, ஹர்த்தால் அனுஷ்டித்து தமது எதிர்ப்பை வெளிப்படையாகக் காட்டினர். இதனுல் அமைச்சர் முகம்மது கல்முனைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த போது நகரம் வெறிச்சோடிக் கிடந்தது. கடைகள் பூட்டப்பட்டு கிடந்தது. மக்களின் கோப வெளிப்பாட்டைத் தெரிந்த அமைச்சர் கல்முனை ஸாகிராக் கல்லூரிக்கு ஊர்பிரமுகர்களை அழைத்தார். 'கடைகள், வீடுகள், வாகனங்களை உடைத்ததும், துப்பாக்கிப் பிரயோகம் செய்ததும் சிங்களப் பொலிசாரே' என ஊர் பிரமுகர்கள் ஒரே குரலில் அமைச்சரின் முகத்திலறைந்தாற் போல கூறிவிட்டனர். இதன் மூலம் இஸ்லாமிய மக்களின் நலனுக்காக முதலைக் கண்ணீர் வடிக்கும் சிறிலங்கா அரசின் போலி நாடகம் உலகுக்கு அம்பலமானது.

அத்துடன் அரசினல் உருவாக்கப்பட்ட மேற்படி ஆயுதப் பிரிவுகளைஇனியும் இயங்க வைப்பதில் சிரமங்களையும் தோற்றுவித்துள்ளது. காத்தான் குடியில் பாடசாலை அதிபர் ஒருவரைத் தாக்கிய ஊர் காவற்படையினர், அண்மையில் பஸ்ஸில் வைத்து ஒன்பது பேரைச் சுட்டுக் கொண்டது தெரிந்ததே. இவை போன்ற பல்வேறு சம்பவங்களில் சம்பந்தப்பட்ட ஊர் காவற்படையினரைக் கலைத்து விடும்படியும், ஆயுதங்களை மீளப்பெறும்படியும் காத்தான்குடி வாசிகள் மட்டக்களப்பு பிரதிநிதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். மேற்படி கோரிக்கையை ஏற்றுக் கொண்ட மட்டக்களப்பு இரண்டாவது பிரதிநிதி ஜனப் ரிஸ்லி சின்னலெவ்வை ஊர் காவற்படையைக் கலைத்து விடும்படி அரசுக்கு சிபார்சு செய்திருப்பது அரசின் திட்டம் தவிடுபொடியானமைக்கு தக்கசான்றாகும்.

மேலும் இஸ்லாமிய மக்களின் நலன்கள் எவ்வாறு புறக்கணிக்கப்படுகிறது என்றும் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதியாகிய எனது கடிதத்திற்கே எப்படி மதிப்பளிக்கப்படுவதில்லை என்றும் பாராளுமன்றத்தில் சம்மாந்துறை பிரதிநிதி எம்.ஏ. அப்துல் மஜீத் குறைபட்டு கொண்டார். ஹிங்குரான சீனித் தொழிற்சாலைக்கான கரும்புப் பயிர்ச்செய்கைத் திட்டத்தில் இதயம் போன்ற பகுதியாக விளங்குவது இறக்காமம், வறுப்பத்தாள், சேனை போன்ற இஸ்லாமியர் கிராமங்களாகும். கரும்புச் செய்கைத் திட்டத்தின் கீழ் சம்மாந்துறைத் தொகுதியில் 7400ஏக்கரிலும், பொத்துவில் தொகுதியில் 5000 ஏக்கரிலும், அம்பாறையில் 600 ஏக்கரிலும் கரும்புச் செய்கை பண்ணப்படுகின்றது மேலும் கரும்புச் செய்கையை விஸ்தரிப்புக்கென நிலம் ஒதுக்கப்பட்டு விவசாயிகளுக்குப்பகிர்ந்து கொடுக்கப்பட விருந்த போதும் இறக்காமம், வறுப்பத்தான் சேனைப் பகுதிகளைச் சேர்ந்த 146 குடுப்பங்களைத் தெரிவு செய்து (இவர்களில்20 சிங்களக் குடும்பம்) சம்மாந்துறை பிரதிநிதி மஜீத் சிபாரிசு செய்திருந்தார். ஆனல் இவரது சிபாரிசுப் பட்டியல் நிராகரிக்கப்பட்டு அம்பாறைப் பிரதிநிதி தயாந்தவின் பட்டியலுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டமையைக் கண்டித்து பாராளுமன்றத்தில் உரையாற்றுகளில் தனது உள்ளக்கிடக்கையைத் திறந்து காட்டினர் இதில் மேலும் பேசிய 'ஜனப் மஜித் புனித நகர்த் திட்டத்தின் கீழ் 568 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்ட போதிலும்8ஏக்கர் மட்டுமே இத்திட்டத்திற்கு பயன்படுத்தப்படுகிறது ஏனைய 560ஏக்கர் நிலத்திலும்இப்பிரதேசத்தை சார்ந்த சமயசமய ஊழியர்கள் தான் குடியமர்த்தப் பட்டுள்ளனர். இது ஒரு அப்பட்டமான நில அபகரிப்பே என்பதையும் தொட்டுக் காட்டினர்.

தமிழ்பேசும் மக்களை ஒடுக்கி சிங்கள பேரினவாத விஸ்தரிப்பிற்கு இராணுவத்தைப் பயன்படுத்திவரும் அரசானது இராணுவத்தினரும், அதிரடி பொலிசாரும் கல்முனையில் மேற்கொண்ட அத்துமீறல்களுக்கு நியாயம் கற்பித்து வருகின்ற

(ம.ப.பா)

---

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

## ஜே. ஆர். விரும்பு.....

"உங்கட ஆக்கள் இதை வெறும் கரம்போட் மாதிரி நினைக்கிருர்கள். காய்கள் நேருக்கு நேர அடிச்சு விளையாட கரம்போட் இல்லை, இது செஸ்போட் ஒண்டை ஒண்டு வெட்டும் வெட்டுற மாதிரிப் பயமுறுத்தும் எல்லா நேரத்திலும் எல்லாத்தையும் அரக்கேலாது. பார்த்துக் கவனமாய் விளையாடவேணும் பொறுமையாய்".

"அதெல்லாம் சரி இப்ப என்ன செய்கிறது"

"முதலில் இந்தியாவுக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையில் இப்ப ஒரு கீறல் விழுந்து இருக்குது. இதை பயன்படுத்தி இந்தியாவின் கையிலிருந்து வெளியில எடுக்க வேணும்"

"அதெப்படி முடியும்"?

"அடம்பனில் பிடிபட்ட ஆக்களை விடுவிக்கின்ற முயற்சியில நேரடியாய் இறங்க வேணும்".

"யாழ்ப்பாணத்துக்கு ஆமி போகாதே" "இதுதான்பிழை ஆமியை விட்டுட்டு சிவிலியன்களை அனுப்பி மனிதாபிமான அடிப்படையில் விடச் சொல்லிகேட்டு, அதற்கு அவர்கள் விதிக்கிற நிபந்தனைகளுக்கு இணங்கினல் பிரச்சனை சுமுகமாய் தீரும்."

"பிறகு"

"பிறகென்ன நாங்களெல்லோரும் இலங்கை மக்கள். எங்களுக்குள் பிரச்சனைகளை நாமே பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்று அறிவிச்ச உடனே இந்தியா என்ன நினைக்கும் "எங்களைத் தேவையில்லையெண்டு எல்லாரும் கை கழுவிப் போட்டினை போல கிடக்கு' எண்டு தானே

"ஓமோம். நல்லா விளங்குது நல்ல ஐடியா".

யாழ் நகரெங்கும் சிலிர்த்தது தன் புதல்வர்களின் பெருமையை எண்ணி மண் மாதா வியந்து கொண்டாள். எம்மவரின் வீரத்தின் முன்னே தாக்கு பிடிக்க முடியாத எதிரிப்படைகளின் கொட்டம் அடங்கியது. முதுகெலும்பு முறிந்தது என்ற எக்காளத்தொனி யாழ் நகர் தெருவெங்கும் எதிரொலித்தது.

*

ஜெயபாலசிங்கமும், வின்சன்ட் பெரேராவும் மிகக்குதூகலமாய் வரவேற்றனர். கப்டன் கொத்தலாவலையும் மற்றவர்களும் காவலுக்கு வெளியே நிற்க காங்கேசன்துறைப் பட்டினசபை மண்டபம் களை கட்டியது. நீண்ட பெரிய மேசையின் ஒரு புறத்தில் கிட்டு, ரஹீம் போன்ற விடுதலை புலிகளின் பொறுப்பாளர்களும் மற்றப் பக்கத்தில் அரசாங்க நல்லெண்ணக் குழுவும் அமர்ந்திருந்தனர்.

தொடர்ந்து பேசுவதாயிருந்தால் நல்லெண்ணம் செயலிலே காட்டப்படல் வேண்டும். அதாவது தடுத்து வைக்கப்பட்டவர்கள் விடுதலை பெறவேண்டும். தாயகத்தை அங்கீகரிக்க வேண்டும். இந்தியா சாட்சிக்கு வரவேண்டும் என்று கூறிக்கொண்டு போனதைத் தாங்க முடியாமல் வின்சன்ட் பெரேராவுக்கு வியர்த்துக் கொட்டியது. 'வெய்யில் அதுதான் வியர்க்குது" என்று சொல்லிச் சமாளித்தார்.

கொழும்பு திரும்பிய வின்சன்ட் பெரேரா அவசரமவசரமாக லலித்தை சந்தித்தார். "சும்மா சொல்லப்படாது. சின்னப்பெடியள் எண்டாலும் விசயகாரர்தான், எங்கடை புலுடா ஒண்டும் அங்கை பலிக்காது" என்ருர்.

**"என்னை கையில தந்தால் இவங்களை ஒரு கை. பார்க்கும்", என்று கையைப் பிசைந்தார் லலித். அடுத்து முறை கூடிய மந்திரிசபை லலித்தின் கைகளில் தமிழ் மக்களின் தலைவிதியை ஒப்படைத்தது.**

*

டிக்சிற்றை சந்தித்து இந்தப் பிரச்சனை பற்றி ஜே. ஆர். உடன் கதைச்சு ஒரு நல்ல முடிவு காணச் செய்யவேணும் என்ற ஆசையுடன் ஒரு குழுவினர் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டனர்.

கோட்டையிலிருந்து இந்தியத் தூதரகத்துக்குச் சென்ற குழுவினர் தூதுவரைச் சந்திக்க அனுமதி பெறுவதே பெரும் பாடாய் போயிற்று. ஒருவாறு கப்பார்க்க அனுமதி கிடைத்ததும்அறைக்குள் விரைந்தனர். அப்போது சோம்பலை முறித்து கொட்டாவி விட்டபடியே வந்த டிக்சிற்

"என்ன விடயம்! சொல்லுங்கோ"

எரிபொருள்தடை விதிக்கப்பட்டிருக்கிறது யாழ்ப்பாணத்துக்கு உணவுப் பொருட்கள் கொண்டு செல்லவும் கட்டுப்பாடு- பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. பயாபரநாட்டு விடுதலைப் போராட்டத்தை நசுக்கியது போல் எம்மவரையும் அடக்கி விட அரசு முயல்கிறது இதை நீங்கள் கண்டித்து எங்களுக்கு எல்லாம் கிடைக்க ஆவன செய்ய வேண்டும்" எனக் கேட்டுக்கொண்டனர்

"நான் போனல் அந்த மனிசன் ஜே ஆர். என்ன சொல்லும் தெரியுமா? நீர்பாட்டுக்கு உம்மடவேலையை பார்த்துட்டு இரும். அது இதுக்கெல்லாம் இங்கிட்டு ஓடிவரவாணும். அதெல்லாம் நம்ம ஆக்கள் இருக்கிருங்க, நான் பார்த்துக்கிறேன். அப்படின்னு சொல்லும்; நான்என்ன செய்யுறது"

"நீங்களே உப்பிடிச் சொன்னல் ஐயா" சென்றவர்கள் தளதளத்தனர்.

"என்னை யாரய்யா! பெரிசா எடுத்துக்கிருன். நான் ஒரு லெட்டர் பாக்ஸ் [கடிதப் பெட்டி]மாதிரித்தானே. கொழும்பில தாற கடிதத்தை டில்லியிலை குடுக்கிறது, டில்லியில தாறதை கொழும்பில குடுக்கிறதுதானே நம்ம வேலை" போனவர்கள்அடுத்து என்ன சொல்வது எனச் சிந்தித்துக் கொள்கையில் தொடர்ந்த டிக்சித்;

இப்ப பி. எம். அந்தமான் தீவிலை லீவை கழிக்கிருர் அது முடிஞ்சு வந்த உடனே மந்திரி சபைகூட்டம் அடுத்தது தான் பாதுகாப்புக் கவுன்சில் கூட்டம். அதிலே இலங்கைப் பிரச்சனை தொடர்பாக முக்கிய முடிவுகள் எடுக்கப்படும். அதற்குப்பிறகுதான் நான் என்ன செய்வது என யோசிக்கலாம் என்று கூறினர். அனைவரும் விடை பெற்றுக்கொண்டு திரும்பினர்.

*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மலர்: 3 இதழ்: 6 டிசம்பர் 86/ஜனவரி பெப்ரவரி 87

# பொதுமை

வெளியீடு: ஈழப்புரட்சி அமைப்பு - (ஈரோஸ்)
த. பெ. எண். 2356, சென்னை 600024.

ஈழத்தின் இன்றைய அரசியல், பொருளாதார சமூக சூழ்நிலைகளை வைத்து நோக்குமிடத்து அனைத்திலும் ஒரு தேக்க நிலை தென்படுகின்றது. இராணுவத்தின் அதிகரித்த கெடுபிடிகள் பேச்சு வார்த்தைக்கு அழைக்கும் குள்ள நரித்தனமான இராஜதந்திரம், இன்னமும் மத்தியஸ்தம், என்று சொல்லிக் கொண்டு வெறும் கலையும், கண்டனமும் தெரிவிப்பதோடு திருப்திப்படுவர்களின் போக்கு, போராடும் சக்திகளிடையேயான முரண்பாடுகள் பகைமுரண்பாடுகளாக முற்றி விட்ட விபரீதம் எனப் பலவற்றால் இன்று தேக்கமான ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாக ஒரு தோற்றம் ஏற்பட்டிருக்கிறது. தவளை தரித்திருப்பது மீண்டும் பாய்ச்சல் செய்யவே என்பது பொதுவாக அனைவருக்கும் புரிந்ததொன்றாகும்.

காலம் காலமாக தமிழர்களின் தலைவர்கள் என்று சொல்லிக்கொண்ட மிதவாதத் தலைவர்களுடனும், அவர்களையடுத்து தனியரசு கோரும் போராளிகளுடனும பேசிபேசி மட்டுமன்றி கொடுத்த உறுதிகளை நிறைவேற்றாமலும், பிரச்சினைகளை வளர்த்துக்கொண்டும் வந்த அரசின் சதி நடவடிக்கைகள் இனியும் தொடர முடியாது என்பதை உணர்ந்த அரசு மக்களை ஏமாற்ற முனைந்துள்ளது. போராட்டத்தின் தேக்கநிலையைப் பயன்படுத்தி 'அன்பான மக்களே' யாழ்ப்பாண மக்களே' 'தமிழ் மக்களே' என்று அன்புடன் அழைத்து துண்டுப் பிரசுரங்களை அள்ளி வீசுகின்றனர். அதுமட்டுமன்றி வானொலியில் 'கிசுகிசு' செய்திகளையும், தொலைக்காட்சியில் சினிமா முதல் நீலத்திரைப்படம், சினிமாப் பாடற் காட்சிகள் என பல்வேறு 'சோப்பு' போடும் நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. சீனாவின் புரட்சியை மழுங்கடிக்க அரசு அபினைத் தாராளமாக அனுமதித்தது. இதனால் இளைய தலைமுறைகளைக் காத்து புரட்சியைக் காக்க அபினி யுத்தம் ஒன்றை நடத்தவேண்டி ஏற்பட்டது.

அரசின், பொம்பர் குண்டுகளும், கெலியின் குண்டுகளும், கண்போட்டின மோட்டார் குண்டுகளும், இராணுவ முகாம்களின் ஷெல்களும், துப்பாக்கிகளின் சன்னங்களும் உயிரைக் குடித்து, வாழ்வைப் பறித்துச் செய்யும் அழிவுகளின் மத்தியில் அரசின் இந்த பரிதாபமும், பரிவும் எப்போது? ஏன் பிறந்தது என்பதனைச் சிந்தித்தால் ஈழவரை அழிப்பதற்கான மூலம் அங்குதான் உள்ளது என்பது தெளிவாகும்

இத்தகைய நிலையில் போராடும் தோழன் உறுதியுடன் செயற்பட மக்களே காரணமாகின்றனர். கொக்கட்டிச்சோலை, மூதூர், மன்னார், கிளிநொச்சி என்று அழித்தவன் யாழ்ப்பாணத்தையும் விடுவானா என்ற ஐயமும், போராட்டம் தோல்விதான் என்ற சோர்வும் மக்களிடமோ அன்றி போராளியிடமோ ஏற்படுமாயின் அது இயங்கியல் சக்கரத்தின் முன்னோக்கிய நகர்வினைப் புரியாத தன்மையையே காட்டும் தோற்றுவிட்டோம், ஆயுதங்கள் இல்லை. ஆயுதங்கள் குறைவாகவே உள்ளது என்று கணக்குப்போட்டுக் கல்லாய் இருந்தால் பயனில்லை. கல்லைச் செதுக்கி சிலை வடிக்கும் சிற்பியாய் மாறவேண்டும். ''போரில் வெற்றியினை அளிக்கும் பங்கு பெருமளவில் உளச்சார்பாகவும், சிறிதளவு பங்கே போர்க் கருவிகளும் வகிக்கின்றன. யுத்தம் என்பது துப்பாக்கிகள், தோட்டாக்களும், விமானங்கள் நிறைந்ததொன்றல்ல. இவற்றின் மேல் நம்பிக்கை கொண்டிருக்கின்மையினாலேயே கூலிப்படைகள் தோல்வியைத் தழுவிக்கொள்கின்றன'' என்ற காஸ்ரோவின் கூற்று எத்தனை உண்மையானது என்பதை உணரவேண்டியது நம ஒவ்வொருவரின் தேவையும் ஆகும்.

தலைமையை அழித்து அல்ஜீரியாவின் சுதந்திரப் போரை நசுக்கி விட்டதாக எண்ணியிருந்த ஏகாதிபத்திய அரசின் கொட்டத்தை இரண்டாண்டுகள் கழிந்து 1960 இல் எழுந்த மக்கள் எழுச்சியானது அடக்கி அந்த மக்களுக்கு சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுத்தது. ஆயுதங்கள் சாதிக்க முடியாததை மக்கள் சாதித்தனர். எனவே கருவிகளின் எண்ணிக்கையோ தாக்குதலின அளவுகளோ மட்டும் விடுதலையைப் பெற்றுத் தந்துவிடாது. எங்கள் சிந்தனையின் வெற்றியும், உளவியல் ரீதியான திடமும்தான் வெற்றிக்கு வழிகாட்டும்

எனவே அழிந்துவிடுவோம், தோற்று விட்டோம் விடுதலை கனவாகி விட்டது, நாங்கள் அடிமைகள் தான என்று மனந்தளராமல் அதேவே நமது வலிமையை உணராது வெறுமனே ஆயுதத்தை மட்டும் எண்ணிவிட்டு வென்றுவிட்டோம், வெற்றி பெறறோம் என்றும் பெடியள் விடான்கள் துரத்தியடித்து விடுவாங்கள் என்று கூறிக்கொணடு இன்னொரு தாய் பெற்ற பிள்ளையை மறைத்து வைக்கும் மனோபாவம் மாற அனைவருடைய பிரச்சினைக்கும் தீர்வு காண நாங்கள் எழுவோம் என்ற உறுதியுடன் கரங்களை இணைப்போம் ஈழம் மீட்போம்

## இன்னுயிர் ஈந்தோர்

**தோழர் ரவி –** (ரவீந்திரன்)
பூநகரியைப் பிறப்பிடமாகக் கொண்டு நாவாந்துறையில் வசித்த இவர் யாழ் பிராந்திய வேலைத்திட்டங்களில் பங்கு கொண்டவர். திருநெல்வேலி, குருநகர் தொகுதிக் குழுக்களிலும் வேலைத்திட்டங்களில் பங்களித்தவர். மன்னார் பிராந்திய அசைவுநிலை இராணுவ குழுவில் பங்காற்றியவர் விபத்துக்குள்ளான இவர் 01-01-87 அன்று இன்னுயிர் ஈந்தார்.

**தோழர் ராதா -** (தங்கராசா)
மலையகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் இனக்கலவரத்தால் பாதிப்புற்று விஸ்வமடுவில் வசித்துவந்தார். குறிபார்த்துச் சுடுவதில் தேர்ச்சி பெற்றிருந்த இவர் வெற்றிகரமாக நிகழ்ந்த பல கண்ணிவெடித் தாக்குதலிலும், வான் எல பொலிஸ் நிலைய தாக்குதலிலும் வெற்றிக்குப் பங்காற்றியவர். 7-1-87 அன்று இராணுவத்துடன் நடந்த நேரடிச் சமரில் இரணடு இராணுவத்தானை கொன்றொழித்து தன்னுயிரையும் ஈர்ந்தார்.

**தோழர் ரஞ்சித்** (ஸ்ரீகாந்தன்)
தண்ணீரூற்றைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் வவுனியா பிராந்திய வேலைத்திட்ட பொறுப்பினை மேற்கொண்டார். ஒட்டுசுட்டான் அசைவுநிலை இராணுவக் குழுவில் பங்காற்றிவந்தார். 24-1-87 அன்று ஏற்பட்ட விபத்தொன்றில் இன்னுயிர் ஈந்தார்.

**தோழர் பிரான்சிஸ் –** (பிரான்சிஸ் மனோகரன்)
பெரியவிளானைப் பிறப்பிடமாகக் கொண்ட இவன கடமைகளைப் பொறுப்புடனும், துடிப்புடனும், ஆர்வத்துடனும் நிறைவேற்ற வல்லவன். மானிப்பாய், இளவாலை தொகுதிக் குழுக்களில் தன் பங்காற்றியவன். 10-02-87 அன்று காவல் கடமையில் ஈடுபட்டிருந்தவேளை நிகழ்ந்த விபத்தின்போது இன்னுயிர் ஈந்தான்.

**தோழர் மோகன் -**
கிளிவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் அமைப்புப் பணிகளில் பங்குகொண்டு செயற்பட்டார். கடந்த 12-2-87 அன்று மாட்டுவண்டியில் கூனித்தீவு வந்த இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டினால் இன்னுயிர் ஈந்தார்.

**தோழர் பெனடிக்ற் விக்கிரமன் –**
இருதயபுரத்தைச் சேர்ந்த (மூதூர்) இவர், குடும்பஸ்தராக இருந்தபோதும் அமைப்புப் பணிகளில் குறைவின்றிச் செயற்பட்டார். பண்ணைவேலைகளில் கூடிய பங்களிப்பினைச் செய்த இவர் மூதூர் பகுதிகளில் இராணுவத்தின் பலநாள் தொடர்ந்த தேடுதலின் போது 16-2-87 அன்று சுடப்பட்டு இன்னுயிர் ஈந்தார்.

**தோழர் பறக்கும் புறா –** (சிவஞானம்)
சேனையூரைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் தனது ஆரம்ப காலங்களில வழிகாட்டியாகவும், தோழர்களைப் பராமரிப்பவராகவும் இருந்தார். பின்னர் மூதூர் கிழக்குத் தொகுதிக்குழு பொறுப்பாளராக பங்காற்றிக் கொண்டிருந்தபோது கடந்த 14-2-87 அன்று மூதூர் பகுதிகளில் அரச பயங்கரவாதிகள் அழிவு செய்தபோது தோழரின் இன்னுயிரையும் பறித்துக் கொண்டனர்.

**தோழர். சலீம்** (முகமது சலீம்)
தம்பலகாமத்திலுள்ள குரங்குபாஞ்சான் என்னும் கிராமத்தைச் சேர்ந்த தோழர் சலீம் 21-1-87 அனறு அராஜகத்தின் துப்பாக்கி வேட்டுக்கு இன்னுயிர் ஈந்தார். இவர் குடும்பஸ்தரான போதும் தனது பணியை செவ்வனே ஆற்றினார்.

## காங்கேசன்துறை இராணுவத்துடன் மோதல்

**26. 02. 87** அன்று காங்கேசன்துறை ஹாபர்வியூ ஹோட்டல் முகாமிலிருந்து வெளியேறி மாவிட்டபுரம் கத்தசுவாமி கோவில்வரை முன்னேறிய இராணுவத்தினர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது, RK 155 82 M. M மோட்டர்கள் கொண்டு நிகழ்த்தப்பட்ட இத்தாக்குதலினால் இராணுவத்தின் முயற்சி முறியடிக்கப்பட்டது. இராணுவ தரப்பில் பலத்த சேதகள் ஏற்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

## விமர்சன அரங்கில்...

பொதுமை பற்றியதெளிவான கண்ணோட்டமும் அங்கு வைக்கப்பட்டது.

11.01 87 அன்று சாவகச்சேரிப் பிராந்தியத்தில் பொதுமை வாசகர் விமர்சன அரங்கு நிகழ்த்தப் பட்டது. இச்சந்திப்பில் பல்வேறு இடங்களிலும் இருந்து ஆர்வலர்கள் பங்கு கொண்டனர்.

வாசகர்களுக்கு இதழ் தொடர்ச்சியாக கிடைப்பதை உறுதிப்படுத்துமுகமாக சந்தாதாரர்களை சேர்த்துக் கொள்ள வேண்டும். தகுந்த கால இடைவெளியில் இதழ் ஒழுங்காக வெளியிடப்பட வேண்டும் என்றவாறாக வாசகர்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இதழ் மேலும் செழுமைப்படும் வகையில் வாசகர்களின் கருத்துக்கு இடம் ஒதுக்குமாறும், வெவ்வேறு உத்திகளில் கருத்துக்கள் தெளிவாக முன்வைக்கப்படல் வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

எமது வெளியிடுகளான — பொதுமை – ஈழம் - நாங்கள் — பற்றிய ''விமர்சன ஆய்வினை'' நடத்தவிரும்பும் அரசியல் இலக்கிய ஆய்வாளர்களும், வாசகர் வட்டத்தைச் சேர்ந்தவர்களும் எமது வெளியீடுகளின விமர்சன அரங்குகளை ஏற்பாடு செய்ய முன்வரலாம். அமைப்பின் தோழர்களோடு தொடர்பு கொண்டு ஒழுங்கு செய்யப்படும் இத்தகைய கலந்துரையாடலில் வெளியீட்டுக் குழுவைச் சார்ந்தவர்களும் பங்கு கொள்வர்.

## அதிரடிப்படை.....

தேயல்லாமல் நீதி வழங்கியதாக தெரியவில்லை. இஸ்லாமியரின பொது எதிரியான இஸ்ரேலியரின் ஆலோசனையில் இயங்கிம் சிறிலங்கா அரசின் பிரித்தாளும் தந்திரம் இனியும் எடுபடமுடியாதுஎன்பதை மேல் கல்முனைச் சம்பவமும் அதன் பின்னான நிகழ்ச்சிகளும் எடுத்துக் காட்டுகின்றன.

அத்துடன் பாடசாலைப் புத்தகத்தில் நபிகள் நாயகத்தின் உருவப்படம் பொறிக்கப்பட்டமையும், அதனால் இஸ்லாமியர்களின் மத உணர்வுகள் காயப்படுத்தப்பட்டதையும் கூட தற்செயலான சம்பவங்களாக எடுத்துக் கொள்ள முடியாது என்பதே இஸ்லாமியரின் எண்ண வெளிப்பாடு ஆகும்.

## மன்னாரில் நேரடி மோதல்

மன்னார் பகுதியில் அண்மையில இராணுவம் மேற்கொண்ட இனவழிப்பு நடவடிக்கையின் போது எமது தோழர்கள் சிறிலங்கா இராணுவததுடன் நேருக்கு நேர் மோதினர். 10. 02. 87 ஆந்திகதி பரப்புக்கடந்தானில் நடந்த இம்மோதலில் 20 இராணுவத்தினரைக் கொன்றும் 10 இராணுவத்தினரைப் படுகாயமடையச் செய்துமுள்ளனர்.

**நாம் ஈழவர், நமது மொழி தமிழ், நம்நாடு ஈழம்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்